IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 68 /2012

Deposition of witness for DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Caste | : - |
| Father's Name | : கங்காதரன் | Calling | : - |
| Village | : கொக்கேரிகிராமம், காட்பாடி | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 25 day of July, 2019.

Cross Examination (பிரதிவாதி தரப்பு)

முதல் விசாரணை நிரூபணவாக்குமூலத்தை தயார் செய்ய தகவல் கொடுத்தது நான் தான். நான் 10 வகுப்பு படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் சரளமாக எழுத, படிக்கத்தெரியாது. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரியும். மேல்பாடி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மாத சம்பளம் ரூ.10,000/-. எனக்கு சொந்தமான வீடு கொக்கேரி கிராமத்தில் உள்ளதா என்றால் உள்ளது. அதனுடைய தற்கால மதிப்பு எனக்கு தெரியாது. எனது தம்பி வீடு கட்டியுள்ளார். எனது பெயரில் கொக்கேரி கிராமத்தில் வீடு உள்ளது. எனது சகோதரர் இராணுவத்தில் வேலை பார்க்கிறார். அவரது விலாசம், கைப்பேசி எண் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் 18.05.2006-ந் தேதி இறந்தார். எனது உடன்பிறந்தவர்கள் மொத்தம் 8 நபர்கள். அதில் சரவணன், கங்காதரன், ஈஸ்வரி, சாந்தி, ரவி, விமலா, ரகு, முரளி மற்றும் தரணி ஆகியோர்கள் உயிருடன் உள்ளார்கள். எனது தகப்பனாருக்கு பூர்வீக நிலம் உள்ளது. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். பூர்வீக நிலம் 3,600 சதுரடி உள்ளது. பூர்வீக சொத்தின் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் பள்ளியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்தார். எனது தகப்பனார் எவ்வளவு மாத சம்பளம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பணிபுரிந்த

பள்ளியில் எத்தனை ஆசிரியர்கள் பணிபுரிந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதே பள்ளியில் வாதியினுடைய தகப்பனார் ஆஞ்சநேயர் மற்றும் மார்கபந்து என்ற ஆசிரியர்கள் பணிபுரிந்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPAD I.